**<u>சுருக்கம்</u>**


பணியமைப்பு – மூன்றாம் நிலை நகராட்சிகள் நிர்வாகம் – மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் – பேரூராட்சிகளுக்கு திரும்ப அனுப்புவது தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.118 ந.நி(ம)கு.வ. துறை நாள் 21.08.2007–க்கு திருத்தம் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.


---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை**

அரசாணை (நிலை) எண். 182 நாள்: 06.10.2009

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.118 ந.நி(ம)கு.வ. துறை நாள் 21.08.2007.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.74948/2006/எஸ்4 நாள் 04.06.2008, 10.07.2009 மற்றும் 16.09.2009.

---

**<u>ஆணை:</u>**

தமிழகத்திலுள்ள 611 பேரூராட்சிகளில் 562 பேரூராட்சிகளே சிறப்பு ஊராட்சிகளாகவும் 49 பேரூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகளாகவும் வகை மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்ட 49 பேரூராட்சிகளில் பணிபுரிந்த அலுவலர்களை பேரூராட்சித் துறைக்கு திரும்ப அனுப்புவது தொடர்பாக முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது:-

a. அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களை பொருத்தமட்டில் பேரூராட்சிகளாக இருந்து மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றப்பட்ட பின்பு அவர்கள் பணிபுரிந்த நகராட்சிகளிலேயே பணிபுரியவேண்டும்.

b. அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களை பொருத்தமட்டில் அவர்கள் தற்போது பணிபுரியும் மூன்றாம்நிலை நகராட்சிகளில் இருந்து பேரூராட்சிகளின் இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள பேரூராட்சிகளுக்கு அவர்கள் முதுநிலை அடிப்படையில் படிப்படியாக மாறுதல் செய்யப்படவேண்டும்.

c. மேற்குறிப்பிட்டவாறு மாறுதல் செய்யப்படுவதால் மூன்றாம்நிலை நகராட்சிகளில் ஏற்படும் காலிப்பணியிடங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரால் பூர்த்தி செய்யப்படும்.

d. மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரியும் செயல் அலுவலர்கள் பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திற்கு திரும்ப மாற்றப்படவேண்டும். அவ்வாறு மாற்றப்படுவதால் ஏற்படும் காலிப்பணியிடங்களை இரண்டாம்நிலை நகராட்சி ஆணையர் நிலையிலுள்ளவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையரால் நிரப்பலாம். அவ்வாறு மேற்படி காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும்வரை பேரூராட்சி இயக்குநர்

அலுவலகத்திலிருந்து வேற்றுப் பணி அடிப்படையிலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அக்காலிப் பணியிடங்களை நிரப்பலாம்.

e. மூன்றாம்நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களின் முதுநிலை அவர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாக கொண்டு பிற நகராட்சி பணியாளர்களுடன் இணைத்து சமநிலையில் முதுநிலைப் பட்டியல் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசாணை (நிலை) எண். 118, ந.நி (ம) கு.வ. துறை, நாள் 21.08.2007–க்கு கீழ்க்கண்டவாறு திருத்திய அரசாணை வழங்குமாறு கோரியுள்ளார் :-

**I அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள்**

(1)அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் தொடர்ந்து நகராட்சிகளிலேயே பணிபுரிய அனுமதிக்கலாம்;

(2)நிலையாக்கப்படாத காலிபணியிடங்களை நகராட்சி நிர்வாக இயக்குநரே நிரப்பலாம்;

(3)மூன்றாம் நிலை நகராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தபடும் பட்சத்தில் ஏற்கனவே இரண்டாம்நிலை நகராட்சி பணியாளர்களுக்கான நகராட்சி பணிவிதிகள் உள்ளதால் இதற்கென தனி பணி விதிகள் ஏதும் தேவையில்லை.

**II அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள்**

(4)பேரூராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளவாறு பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரிடமும் அவர்களது விருப்பத்தினைப் (Option) பெற்று அதன் அடிப்படையில் நியமனம் செய்யலாம்;

(5)மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களை தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் தொடர்ந்து இருக்க அனுமதிக்க இயலாது;

(6)மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடம் அவர்கள் தொடர்ந்து நகராட்சிகளிலேயே பணிபுரிய விருப்பம் கோரும்போது அவர்கள் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களாக மாற்றப்படுவார்கள் என்பதனை அவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

3. இப்பொருள் சம்பந்தமாக பேரூராட்சி இயக்குநர் கருத்து தெரிவிக்கையில் மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடம் ஏற்கனவே அவர்கள் ஆங்காங்கே தொடர்ந்து பணிபுரிவதற்கான

விருப்பம் கோரப்பட்டுள்ளது என்று தனது 20.12.2006–ம் நாளிட்ட நேர்முக கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

4. மேலும் தற்போது அரசாணை (நிலை) எண். 62, ந.நி (ம) கு.வ, துறை, நாள் 18.4.2009–ல் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் மற்றும் உச்சநீதிமன்ற ஆணை ஆகியவற்றின் அடிப்படையில் பேரூராட்சிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் முதுநிலையை மாநில அளவில் நிர்ணயிக்கும் வகையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கு ஏதுவாக தமிழ்நாடு பேரூராட்சிகள் சார்நிலை பணிக்கான சிறப்பு விதிகளுக்கு தக்க திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக பேரூராட்சி மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான மாநில அளவிலான பணிமூப்பு பட்டியல் பேரூராட்சி இயக்குநரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தற்போது மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் சிலர் தாங்கள் பேரூராட்சி துறைக்கு சென்றால் மாநில அளவிலான பணிமூப்பு பட்டியலின்படி தங்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு உள்ளதாக கருதி தங்களை பேரூராட்சி துறைக்கு மாறுதல் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

5. இது தவிர அரசாணை (நிலை) எண். 118, ந.நி (ம) கு.வ. துறை, நாள் 21.08.2007–ஐ எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 6 நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால தடையாணையும் பெறப்பட்டிருந்தனர். தற்போது அவர்கள் அந்த நீதிபேராணை மனுக்களை திரும்ப பெறப்பட்டதால் உயர்நீதிமன்றம் அவைகளை தள்ளுபடி செய்துள்ளது.

6. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று அரசாணை (நிலை) எண். 118, ந.நி (ம) கு.வ. துறை, நாள் 21.08.2007–ல் வெளியிடப்பட்ட அரசாணைக்கு கீழ்க்கண்டவாறு திருத்திய அரசாணை வெளியிடப்படுகிறது:–

**I.அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள்**

(i)அரசு நிலையாக்கப்படாத பணியாளர்கள் தொடர்ந்து நகராட்சிகளிலேயே பணிபுரிய வேண்டும்.

(ii)நிலையாக்கப்படாத காலிபணியிடங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரால் நிரப்பப்பட வேண்டும்.

(iii)மூன்றாம் நிலை நகராட்சிகளை இரண்டாம் நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தபடும் பட்சத்தில் ஏற்கனவே இரண்டாம்நிலை நகராட்சி பணியாளர்களுக்கான நகராட்சி பணிவிதிகள் உள்ளதால் இதற்கென தனி பணி விதிகள் ஏதும் தேவையில்லை.

**II. அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள்**

(iv)பேரூராட்சி இயக்குநரால் தெரிவித்துள்ளவாறு பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரிடமும் அவர்களது விருப்பத்தினைப் பெற்று அதன் அடிப்படையில் பணியமர்த்தப்பட வேண்டும்.

(V) மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களை தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின்கீழ் தொடர்ந்து இருக்க அனுமதிக்க இயலாது.

vi) மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களிடம் அவர்கள் தொடர்ந்து நகராட்சிகளிலேயே பணி புரிய விருப்பம் கோரும்போது அவர்கள் அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களாக மாற்றப்படுவார்கள் என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

vii)இவ்வாறு பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரியும் அரசு நிலையாக்கப்பட்ட பணியாளர்களின் விருப்பத்தினைப் (Option) பெறவும் அதனடிப்படையில் தக்க மேல் நடவடிக்கை எடுக்கவும் பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

7. இவ்வாறு மேலே பத்தி 6–ல் கண்டவாறு நடவடிக்கை எடுத்த பின்னர், மூன்றாம் நிலை நகராட்சிகளில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கும் நிலையாக்கப்பட்ட பணியாளர்களின் மீள்உரிமையை (Lien) பேரூராட்சிகள் துறையில் ரத்து செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்:–**
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை –108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்
அனைத்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை –108
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 600 001.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை 600 005.
**நகல்:–**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
செயலரின் தனிச்செயலர் (ந.நி (ம) கு.வ.), சென்னை – 9
நிதித்துறை, சென்னை –9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.